# தியாகிகளின் தலைவர்
# இமாம்
# ஹுஸைன்
# அலைஹிஸ் ஸலாம்

பிறப்பு

ஹிஜ்ரி நான்காம் ஆண்டு (1) ஷஃபான் மாதம் மூன்றாம் நாள் அலீ, பாத்திமா தம்பதிகளின் இரண்டாம் குழந்தை ஜனனமாகியது, வஹியினதும் விலாயத்தினதும் வீட்டில் இன்னொரு தாரகை உதயமாகியது.

குழந்தை பிறந்த செய்தியைக் கேட்ட நபியவர்கள் அலீ, பாத்திமா தம்பதியினரின் வீட்டுக்கு விரைந்து வந்தார்கள். தம் குழந்தையைத் தருமாறு அஸ்மா (2) விடம் கேட்டார். வெள்ளை நிறப் புடவையில் குழந்தையைச் சுற்றி அண்ணலாரின் அருமைக் கரங்களில் ஒப்படைத்தார் அஸ்மா. குழந்தையைக் கரமேந்திய அண்ணலார்; குழந்தையின் வலது காதில் அதானும் இடக்காதில் இகாமத்தும் கூறினார்கள், (3)

பிறந்து ஏழு நாட்கள் கடந்தன. ஹஸ்ரத் ஜிப்ரீல், நபிகளிடம் வந்தார். "உங்களுக்கு அல்லாஹ் ஸலாம் சொன்னான். மூஸாவுக்கு ஹாரூன் இருந்தவாறு உமக்கு அலீ இருக்கிறார். எனவே குழந்தைக்கு ஹாரூனின் பிள்ளையின் பெயரை இடுவீராக. அப்பிள்ளைக்கு ஷுபைர் (4) எனப் பெயர். அரபியில் ஹுஸைன் எனப் பொருள் படும்." என்றார்கள். அவ்வாறே பெயரிடப்பட்டது. (5)

ஹஸரத் பாத்திமா அன்னையார், தம் குழந்தைகளுக்கு ஏழாம் நாளில் அகீக்கா கொடுத்தார். (6) முடியை சிரைத்து அதன் பாரத்துக்கு தானம் வழங்கினார். (7)

அண்ணலாருடன்

ஹி.4 இல் இமாம் ஹுஸைன் பிறந்தார். அதிலிருந்து ஆறு வருடங்களும் சில மாதங்களும் கழிய நபியவர்கள் காலமானார்கள். அதுவரையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹுஸைன் மீதான தமது அன்பையும் கரிசனையையும் வெளிப்படுத்தினார்கள். மக்களுக்கு மூன்றாவது இமாமின் மகிமைகளைச் சுட்டிக் காட்டினார்கள்.

ஸல்மானுல் பார்ஸீ (றழி) கூறுகின்றார்: "ஒரு முறை நபியவர்கள் குழந்தை ஹுஸைனை மடியிலமர்த்தி முத்தமிட்டவாறு இப்படிச் சொன்னார்கள்: "நீ ஒரு தலைவர். தலைவரின் புதல்வன், தலைவர்களுக்குத் தந்தை. இமாமின் மகன். இமாம்களின் தந்தை. நீர் ஒரு ஹுஜ்ஜத். ஏனைய ஹுஜ்ஜத்துகளின் பிதா. உமது பரம்பரையில் ஒன்பது பேர் உளர். ஒன்பதாமவர் தான் காஇம் (மஹ்தி) ஆவார். (8)

அனஸ் இப்னு மாலிக் அறிவிக்கிறார்: "உங்கள் வீட்டாரில் தாங்கள் யாரை அதிகம் விரும்புகிறீர்கள்? என பெருமானாரிடம் வினவப்பட்ட போது, ஹஸனும்

ஹுஸைனும் (9) என்றார்கள். “என் குழந்தைகளை இங்கே அனுப்புஎன்பார் பாத்திமாவிடம். அவ்விருவரையும் தம் நெஞ்சோடு அனைத்து முத்தமழை பொழிவார்கள். (10)

அபூ ஹுரைரா அறிவிக்கிறார்: “ஹஸனை ஒரு தோளிலும் ஹுஸைனை மற்றைய தோளிலும் சுமந்தவராக,அவர்களை மாறி மாறிக் கொஞ்சிய வண்ணம் நாமிருந்த பக்கமாக வந்த அண்ணலார் சொன்னார்கள்: “இவர்கள் இருவரையும் நேசிப்பவர் என்னை நேசிக்கிறார். இவர்களைக் கோபித்தவர் என்னைக் கோபிக்கிறார். (11)

நபியவர்களுக்கும் இமாம் ஹுஸைனுக்குமிடையில் இருந்த ஆத்மீக மற்றும் தெய்வீகத் தொடர்பையும் அதன் சிறப்பையும் பின்வரும் சின்னஞ் சிறு நபிமொழி செவ்வனே விளக்குகிறது. “ஹுஸைன் என்னிலிருந்து உள்ளவர். நான் ஹுஸைனிலிருந்து உள்ளவன். (12)

தந்தையுடன்

இமாம் ஹுஸைன் ஆறு வருடங்களே அண்ணலாரோடு அண்டி வாழ்ந்தார். தம் தந்தையாருடன் முப்பது வருடங்கள் வாழ்ந்தார். நீதியோடும் நியாயத்தோடும் ஆட்சி நடத்தியவர் அவர் தந்தை. தூய்மையுடனும் இறையடிபணிதலுடனும் வாழ்ந்தவர். அல்லாஹ்வைத் தவிர எதையும் காணாதவர். எதையும் வேண்டாதவர். அவரின் கிலாபத்தைப் பறித்தெடுத்த போதில் மட்டுமன்றி, அவர் கலீபாகவிருந்த காலத்திலும் நிலவிய சூழ்நிலைகள் அவரை அமைதியாக வாழ விடவில்லை.

இந்தக் கடுமையான சோதனை நிறைந்த காலகட்டங்களில் உள்ளத்தாலும் உணர்வாலும் தம் தந்தையாரின் கட்டளைகளுக்கும் முற்றிலும் பணிந்தவராக இமாம் ஹுஸைன் வாழ்ந்தார். வெளிப்படையிலான கிலாபத்தை இமாம் அலீ ஏற்று நடாத்திய காலகட்டத்தில், ஹுஸைனும் அவரது சகோதரனைப் போன்றே தியாக உணர்வுடன் போராடும் போராளியாக விளங்கினார். இஸ்லாத்தின் இலட்சியங்கள் நிறைவேற தம்மாலான அனைத்தையும் நிறைவேற்றினார். சிப்பீன், ஜமல், நஹ்ரவான் போர்களில் பெரும் பங்கேற்றார். (13)

தமது தந்தை அமீருல் முஃமினீன் அலைஹிஸ் ஸலாம் பக்கம் எப்போதும் நின்று தோள்கொடுத்தார். அவரின் கிலாபத்தை வஞ்சித்தோரை சில நேரங்களில் பகிரங்கமாகவும் சாடினார்.

உமரின் கிலாபத்தில் ஒருநாள் மஸ்ஜிதுக்குள் நுழைந்தார் ஹுஸைன். கலீபா மிம்பரில் அமர்ந்து உரையாற்றிக் கொண்டிருந்தார். இறைதூதரின் மிம்பரில் ஏறிய இமாம், “எங்கள் தந்தையின் மிம்பரில் இருந்து இறங்கிச் செல்லுங்கள்என உரக்கச் சொன்னார். (14)

சகோதரனுடன்;

ஹஸ்ரத் அலீ ஷஹீதானதைத் தொடர்ந்து அன்னாரின் வஸிய்யத்தின் படியும் நபிகளாரின் வழிகாட்டலின் பேரிலும் முஸ்லிம்களின் இமாமத், இமாம் ஹஸனிடம்

வந்தது. இமாம் ஹஸனின் வழிகாட்டலை ஏற்பது அனைவருக்கும் கடமையாகியது. வஹியின் மடியில் தம் சகோதரருடன் பிறந்து வளர்ந்த ஹுஸைன், சகோதரனின் இணைபிரியாத தோழராகத் திகழ்ந்தார்கள்.

முஸ்லிம் உம்மத்தின் நலன் கருதி இமாம் ஹஸன், முஆவியாவின் சமாதானத்துக்கு இணங்கிய போதும் அவ்வழியில் பல்வேறு இம்சைகளையும் துன்பங்களையும் அனுபவித்த போதும் தம் சகோதரனுடனேயே நின்றார்.

தன் சகோதரன் முஸ்லிம்களின் நலனுக்காகவே சமாதானம் செய்து கொண்டார் என்பதை ஹுஸைன் அறிந்திருந்தார். அதனால் அதனை அங்கீகரித்தார்.

ஒரு முறை இமாம் ஹஸன், ஹுஸைன் இருவரும் அமர்ந்திருந்த ஒரு சபையில் இமாம் ஹஸனையும் இமாம் அலீயையும் பழித்துப் பேசினார் முஆவியா. இதனைத் தாங்கிக் கொள்ள முடியாத இமாம் ஹுஸைன் முஆவியாவுக்குப் பதில் சொல்ல எழுந்த போது, அமைதியாக இருக்குமாறு இமாம் ஹஸன் சாடை காட்டவே,சகோதரனின் சொல்லை யேற்று உட்கார்ந்து கொண்டார். பின்னர் இமாம் ஹஸன் தாமாகவே எழுந்து முஆவியாவுக்கு வாயடைத்துப் போகும் விதத்தில் பதிலளித்தார். (15)

முஆவியாவின் காலத்தில்

இமாம் ஹஸனின் மறைவுக்குப் பின்னர் இறைவனுடைய திட்டப்படியும் நபியவர்களது வழிகாட்டலின் படியும் இமாம் அலீயின் வஸிய்யத் பிரகாரமும் இமாம் ஹுஸைன் அடுத்த இமாமாகினார்.

அப்போது முஆவியாவின் ஆட்சி நிலவியது. இஸ்லாமிய உம்மத்தின் அதிகாரத்தைக் கையிலேந்தியிருந்த முஆவியாவின் செயல்கள் அந்த உம்மத்தின் அடிப்படைகளையே சிதறடிப்பதாகச் காணப்பட்டன. சீர்கேடான இந்த அரசின் செயற்பாடுகள், இமாம் ஹுஸைனை ஆத்திரம் கொள்ளச் செய்தன. மிக்க மனவேதனையடைந்தாலும் அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து போரிட்டு முஆவியாவை கிலாபத்திலிருந்து துரத்தியடிக்கப் போதிய பலம் இருக்கவில்லை. இமாம் ஹஸனுடைய காலத்தில் காணப்பட்ட நிலைமைகளே தொடர்ந்தும் நிலவி வந்தன.

தமது கருத்துக்களைப் பகிரங்கமாக எடுத்துரைத்து மக்களைத் திரட்டி உமையா ஆட்சியைக் கலைக்க முயற்சித்தால்,எதுவும் முறையாகச் செய்வதற்கிடையில் தாம் கொல்லப் படுவோம் என்பதை இமாம் மிக நன்றாகவே அற்ந்திருந்தார்கள். எதையும் சாதிக்காது வெறுமனே கொல்லப்படுவதை விரும்பாத இமாம், எல்லா நோவினைகளையும் தாங்கிக் கொண்டு தம் சகோதரனைப் போன்று பெறுமைக காத்தார்கள்.

எனினும் ஆங்காங்கு மிகத் தேவைப்பட்ட இடங்களில் தனது ஆட்சேபணைகளைத் தெரிவிக்கத் தவறவில்லை. இதன் மூலம் மக்கள் உள்ளத்தில் நல்லதொரு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை வளர்க்க முடிந்தது.

யஸீதுக்கு பைஅத் செய்ய வேண்டுமென முஆவியா மக்களை வற்புறுத்திய பொழுது இமாம் அதனை மிகக் கடுமையாக எதிர்த்தார். யஸீதுக்கு ஆட்சியை வழங்குவதை அங்கீகரிக்காத, இமாம் பைஅத் செய்யாதது மட்டுமன்றி கடும் வசனங்களால் முஆவியாவுக்குக் கடிதங்கள் வரைந்தார். முஆவியாவின் மரணம் வரை இந்நிலை நீடித்தது. (16)

ஹுஸைனிய எழுச்சி

இஸ்லாமிய ராஜ்யத்தின் அரசு பதவியைத் தனதாக்கிக் கொண்ட யஸீத், தனது அநியாய ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொள்ள விரும்பினான். தனக்கு பைஅத் செய்யுமாறு கோரி பிரபல்யம் வாய்ந்த தலைவர்களுக்கு கடிதம் வரையத் தீர்மானித்தான். அந்த அடிப்படையில் மதீனாவில் இருந்த தனது கவர்னருக்குக் கடிதம் எழுதினான். அதில் இமாம் ஹுஸைன் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் தனக்கு பைஅத் பெறுமாறும் அதற்கு மறுத்தால் அவரைக் கொலை செய்து விடுமாறும் வலியுறுத்தினான்.

அந்த கவர்னர் இந்தச் செய்தியை இமாம் ஹுஸைனுக்கு அறிவித்து அவரது பதிலை வேண்டி நின்றார். இமாம் அதற்குப் பதிலாக, "இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி றாஜிஊன். யஸீத் போன்ற ஓர் ஆட்சியாளன் மூலம் முஸ்லிம் உம்மத் சோதிக்கப் பட்டால் இஸ்லாத்துக்குப் பிரியாவிடை கொடுக்க வேண்டி வருமே எனக் கவலை தெரிவித்தார். (17)

மதுபானம் அருந்துகின்ற, சூது விளையாடுகின்ற, மிகக் கெட்ட நடத்தைகளுள்ள, வெளித் தோற்றத்திலாவது இஸ்லாத்தைப் பின்பற்றாத ஒருவர் முஸ்லிம் உம்மத்தின் ஆட்சிக்கு வருகின்ற போது இஸ்லாத்துக்கு மிகவும் சங்கடமான காலமாகும். ஏனெனில் இத்தகையோர் இஸ்லாத்தின் அதிகாரத்தை வைத்து இஸ்லாத்தின் பேரால் ஆட்சி செய்தே இஸ்லாத்தை அழிக்க முற்படுவார்கள்.

யஸீதின் ஆட்சியை ஏற்க மறுத்த போதே, இனி மதீனாவில் தங்குவது தம் உயிருக்கு ஆபத்தானது என்பதை இமாம் ஹுஸைன் நன்கு புரிந்து கொண்டார்கள். எனவே இறைவெளிப்பாட்டின் பிரகாரம் இரவோடிரவாக இரகசியமாக மக்காவுக்குப் பயணமானார்கள்.

இமாம் பைஅத் செய்த மறுத்தமையும் மக்கா சென்றமையும் மக்காவிலும் மதீனாவிலும் சூடாகப் பரவியது. கூபாவுக்கும் செய்தி பறந்தது. தம்மிடம் வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு இமாமுக்கு அவசர அழைப்பு விடுத்தனர் கூபாவாசிகள். கூபா மக்களது அழைப்பைப் பற்றியும் அங்குள்ள சமூக உணர்வுகளையும் ஆய்ந்தறிந்து தகவலனுப்புமாறு முஸ்லிம் இப்னு அகீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக்

கூபாவுக்கு அனுப்பிவைத்தார். இமாமின் பிரதிநிதியான முஸ்லிமிடம் பல்லாயிரக் கணக்கான மக்கள் பைஅத் செய்தனர். மக்களின் அமோகமான வரவேற்பைக் கண்ட முஸ்லிம், பிரயாணப்பட்டு வருமாறு இமாம் ஹுஸைனுக்குத் தகவல் அனுப்பினார்.

கூபா மக்களின் மனோநிலை இமாமுக்கு நன்கு தெரியும். தமது தந்தை மற்றும் சகோதரரின் ஆட்சியின் போது அம்மக்கள் செய்த துரோகங்களும் காட்டிய எதிர்ப்புகளும் அவரது நினைவில் பசுமையாக இருந்தன. அவர்களது வார்த்தைகளையும் பைஅத் செய்ததையும் முழுக்க நம்பிவிட முடியாது எனத் தெரிந்து வைத்திருந்தார். எனினும் இறைகட்டளையின் படி கூபா செல்லத் தீர்மானித் தார்கள்.

துழல்ஹஜ் மாதம் எட்டாம் நாள், ஹாஜிகள் மினா நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். (18) மக்காவை வந்தடையாத ஹாஜிகள் மினாவைச் சேர்ந்து விட பிரயாணத்தைத் துரிதப்படுத்தி வந்துகொண்டிருந்னர். எனினும் இமாம் அவர்கள் மக்காவிலேயே தங்கியிருந்தார். தனது குடும்பத்தினர் மற்றும் சகாக்களுடன் இராக் நோக்கிப் புறப்பட்டார்.

இதன் மூலம் தனது சமயக் கடமையொன்றை நிறைவேற்ற விரும்பினார். யஸீதை ஆட்சியாளராகத் தாம் அங்கீகரிக்கவில்லை என்பதையும் அவ் ஆட்சிக்கு எதிராகப் போராடத் தயார் என்பதையும் மக்களுக்கு தெரியப்படுத்த விரும்பினார்.

கூபாவுக்கு முஸ்லிம் இப்னு அகீல் வந்த விடயமும் அவரிடம் மக்கள் பைஅத் செய்து கொண்ட செய்தியும் யஸீதுக்கு எட்டின. யஸீதின் அடியாட்களில் மிகவும் மோசமானவனும் உமையாக் கோத்திரத்தின் ஆட்சிக்குப் பல விதத்திலும் உதவி செய்தவனும் படுபாதகனுமாகிய இப்னு ஸியாதைக் கூபாவுக்கு அனுப்பிவைத்தான்.

கூபாவாசிகளிடம் குடிகொண்டிருந்த அச்சத்தையும் அவர்களது பலவீனமான ஈமானையும் சீரழிந்த சமூக நிலைமைகளையும் தனது சதித்திட்டங்களுக்குச் சார்பாக இப்னு சியாத் பயன்படுத்திக் கொண்டான். அச்சுறுத்தலாலும் பலாத்காரமாகவும் மக்களை முஸ்லிமிடமிருந்து வேறுபடுத்தினான். இறுதியாக இப்னு சியாதின் சிப்பாய்களோடு தனித்துப் போராடி, வீர மரணத்தைத் தழுவினார் ஹஸ்ரத் முஸ்லிம். அவர் மீது சாந்தி உன்டாவதாக. பின்னர் சீரழிந்த,நயவஞ்சகம் நிறைந்த வழிதவறிப்போன கூபாவாசிகளை ஹுஸைனுக்கு எதிராகத் திரட்டினான்.

கூபாவுக்கு வரும்படி இமாமுக்கு அழைப்பு விடுத்தவர்களையே இமாமைக் கொலை செய்யவென ஒன்று திரட்டினான். இமாம் ஹுஸைன் வந்ததும் கொலை செய்து விடுவதற்காக அவரது வருகைக்காக எல்லோரும் காத்திருந் தனர்.

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸல்லம் அவர்களும் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் அலீ அவர்களும் இமாம் ஹஸன் அவர்களும் ஏலவே இமாம் ஹுஸைனுடைய ஷஹாதத் பற்றி எதிர்வு கூறியிருந்தனர். ஹுஸைன் அலைஹிஸ் ஸலாம் பிறந்த போதே நபியவர்கள் இது பற்றி அறிவித்திருந்தார்கள்.

(19) இந்தப் பயணம் ஷஹாதத்தில் தான் முடியும் என்பது இமாமாகிய ஹுஸைனுக்கு நன்கு தெரியும்.

அல்லாஹ்வின் பாதையில் உயிரைக் கொடுப்பதிலோ இறை கட்டளையை நிறைவேற்றுவதிலோ உலோபித்தனம் பார்ப்பவராக அவர் இருக்கவில்லை. இதில் தன் குடும்பத்தினர் சிறைப் படுவார்களே என்பது பற்றிக் கூட அலட்டிக் கொள்ளவில்லை. இந்த ரணங்களும் மரணங்களும் கண்ணியமெனக் கருதினார்.

தமது இயக்கத்தின் ஒரே இலக்கு யஸீதின் இஸ்லாமிய விரோத ஆட்சியின் முகமூடியைக் கிழிப்பதும் நன்மையை ஏவித் தீமையை எதிர்ப்பதும் அநியாயத்தையும் அடாவடித்தனத்தையும் மறுப்பதும் குர்ஆனிய போதனைகளைப் பாதுகாத்து முஹம்மதிய இஸ்லாத்தை உயிர்ப்பித்தலுமே என இமாம் ஹுஸைன் அடிக்கடி கூறிவந்தார்.

தாம் மதீனாவில் இருந்து வெளியேறிய இரவிலும் மக்காவில் தங்கியிருந்த காலத்திலும் மக்காவிலிருந்து கர்பலாவுக்குப் பயணம் செய்த போதும் தமது ஷஹாதத் வரையும் இதனை மிகக் தெளிவாக வலியுறுத்தினார்கள். அவரது தோள்களில் இறைவன் இப்பொறுப்பைச் சுமத்தியிருந்தான். தமதுயிரும் தமது குடும்பத்தினா மற்றும் நண்பர்களின் உயிரும் இதில் பறிபோய், பெண்களும் பிள்ளைகளும் சிறைப் பிடிக்கப்பட்டாலும் சரி, அதனை நிறைவேற்றுவதென திடம் கொண்டிருந்தார்கள்.

கர்பலாவில் இமாம் ஹுஸைன் ஷஹீதாகுவது சம்பந்தமான ஹதீஸ்கள் முஸ்லிம் உம்மத்துக்குள் பரவலாகப் புழங்கப்பட்டு வந்தன. இதனால் இமாமின் பிரயாணத்தின் முடிவு பற்றிப் பெரும்பாலும் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் அறிந்து வைத்திருந்தார்கள். நபிமொழிகளிலும் இமாம் அலீ, இமாம் ஹஸன் மற்றும் ஆரம்ப கால இஸ்லாமியப் பெரியார்களின் மூலமும் இவ்விஷயம் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்கள்.

கஷ்டங்கள் துன்பங்களுக்கு மத்தியிலும் இமாம் ஹுஸைன் தம் பயணத்தைத் தொடர்ந்ததானது அவரது ஷஹாதத் உறுதியானது என்ற எண்ணத்தை மக்கள் உள்ளத்தில் தோற்றுவித்தது. இமாம் ஹுஸைன் தம் பிரயாணத்தில் அடிக்கடி இப்படிக் கூறிவந்தார். “எமக்காகத் தம் வசதிகளை அர்ப்பணிக்கத் தயாரானோர், அல்லாஹ்வின் சந்நிதிக்குத் தம்மை இட்டுச் செல்ல விரும்புவோர் எம்மோடு பிரயாணப்படலாம் (20)

இமாம் ஹுஸைன் மீது அன்பும் கரிசனையும் கொண்ட சிலர் அன்னாரின் பிரயாணத்தைத் தடை செய்ய முயன்றதற்கு இதுவே காரணம்.

கலீபாவும் இமாமுமாகிய ஹுஸைன் இப்னு அலீ, தம் கடமையை ஏனையோரை விடவும் நண்குணர்ந்தவர். இறைவன் அவருக்கு வழங்கிய பொறுப்பை எப்போதிலும் தட்டிக் கழிப்பவர் அல்லர் என்ற உண்மையை சிலர் புரியாது இருந்தனர்.

அவரைச் சூழவும் முன்வைக்கப்பட்ட சித்தாந்தங்கள் மற்றும் நியாயங்கள் எதையும் பொருட்படுத்தாது தம் பிரயாணத்தை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லலானார்

இமாம். அவ்வாறு சென்றவர், தனியாக அன்றி தன் உறவுகள் சகாக்கள் பலரோடு ஷஹாதத்தை அரவணைத்துக் கொண்டார். அவர்கள் ஒவ்வொருவரும் இஸ்லாமிய வானில் ஒளிர் விடும் தாரகைகளாய்த் திகழ்ந்தனர்.

சீர்கெட்ட உமையாப் பரம்பரையைச் சேர்ந்த யஸீத் கலீபாவாவதை மறுக்கிறோம் இஸ்லாத்துக்கும் யஸீதுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பதை இஸ்லாமிய உம்மத்துக்குப் புரியவைப்பதற்காக முன்னேறிச் சென்றனர். போராடி உயிர் நீத்தனர். அவர்களது தூய இரத்தத்தால் கர்பலா மண்ணைக் கழுவி விட்டார்கள்.

அதிர்ச்சியும் சோகமும் நிறைந்த இமாம் ஹுஸைனின் படுகொலைப் படலம் நடக்கவில்லையெனின் புரட்சிக்கும் மக்கள் இயக்கத்துக்கும் அது காலாக அமையவில்லை யெனின், யஸீத் தான் நபியவர்களுடைய கலீபா என்ற நம்பிக்கை மக்கள் மனதில் வேரூன்றியிருக்கும். இன்னொரு பக்கத்தில் யஸீதினதும் அவனது அடியாட்களுடைய அடாவடித்தனங்கள் பற்றிய தகவல்களைச் செவியுறுகின்ற மக்கள், நபியவர்களுடைய பிரதிநிதி இப்படித் தான் செயற்படுவார் என்ற எண்ணத்தில் இஸ்லாத்தை வெறுக்கவும் அதிலிருந்து விலகி நிற்கவும் தலைப் பட்டிருப்பார்கள். யஸீதும் அவனது அடியாட்களும் இஸ்லாத்தின் பெயரில் செய்த அட்டூழியங்கள் உண்மையில் எவரும் வெறுக்கும்;விதத்திலேயே இருந்தன.

இமாமின் குடும்பத்தினர், -பெண்களும் பிள்ளைகளுமாக- சிறைப் பிடிக்கப்பட்டு எல்லாவித இம்சைகளுக்கும் இழிவுகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். அவர்களும் கூட நகரங்கள், சந்தைகள் தோறும் இழுத்துச் செல்லப்பட்ட போதெல்லாம், அங்கும் இப்னு சியாதினதும் யஸீதினதும் அரண்மனை தர்பாரிலும் உரக்கச் சொல்லி, உமையா வம்சக் கொடூரர் களின் அடக்குமுறைகளையும் இஸ்லாம் விரோதப் போக்கையும் பற்றிய செய்தியை மக்களுக்குத் தெளிவு படுத்தினர்.

நாய்களுடன் விளையாடும் மதுவருந்தும் யசீது இஸ்லாமிய கிலாபத்துக்குப் பொறுத்தமற்றவர் என்ற உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்களது உரைகளும் அறைகூவலும் ஹுஸைனியப் படுகொலையின் தாத்பரியம் பற்றிய செய்தியைப் பறைசாற்றின. இதயங்களை அதிரவைத்தன.

எல்லாச் சீர்கேடுகளுக்கும் வழிகேடுகளுககும் நிரந்தர உதாரணமாக யஸீத் எனும் நாமமே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவனது ஷைத்தானிய ஆசைகள் இதனால் தவிடு பொடியாயின. இமாம் ஹுஸைனின் உயிர்த் தியாகத்தின் பிரதிபலிப்புகள் பற்றி ஆழமாக ஆராய்ச்சி செய்வோர், அதன் பல்பரிமாணத் தன்மையை நன்கு புரிந்து கொள்வர்.

இமாம் ஹுஸைன் ஷஹீதான நாள் தொட்டு இன்று வரை அவரது போராட்டம் நினைவுகளில் வாழுகிறது. அவரை நேசிப்போரும் பின்பற்றுவோரும் மட்டுமன்றி, மனிதனின் மகிமையைப் போற்றும் எவரும் அவரது நினைவு நாட்களில் கவலை தெரிவிக்கின்றனர். அன்றைய அகோரத்தை நினைத்து ஏங்கி அழுகின்றனர்.

பரிசுத்தவான்களான இமாம்கள் கர்பலா நினைவுகளை உயிர்ப்பிப்பதில் அதிக கரிசனை காட்டினர். இமாம் ஹுஸைனின் அடக்கஸ்தலத்துக்குத் தரிசனத்துக்காகச் செல்வதோடு மட்டும் நின்றுவிடாது, சோகத்தை நினைவுபடுத்தும் நிகழ்ச்சிகளை நடாத்துவது மற்றும் இமாம் ஹுஸைனுக்காக கவலையை வெளிப்படுத்துவதன் சிறப்புகள் பற்றிய ஹதீஸ்களையும் அறிவித்துள்ளனர்.

அபூ அமாரா அறிவிக்கிறார். ஒரு முறை இமாம் ஸஜ்ஜாத் என்னிடம், 'அபூ அமாராவே ஹுஸைனைப் பற்றிப் பாடுங்களேன்' என்றார். நான் பாடினேன். அவர் அதனைக் கேட்டு அழுதார். மீண்டும் பாட மீண்டும் அழுதார். திரும்பவும் அது போலவே நடந்தது. நான் பாடும் போதெல்லாம் அவர் அழுத வண்ணமிருந்தார். அவரது அழுகையை வீட்டிலிருந்தே செவியுற்றேன். பின்னர் இமாம் ஹுஸைன் பற்றிக் கவி பாடுவோர் பெறும் நன்மைகளைச் சொல்லித் தந்தார். (21)

இமாம் சாதிக் அலைஹிஸ் ஸலாம் கூறுகிறார்: "துன்பங்களுக்கு அழுவதும் ஓலமிடுவதும் முஸ்லிமுக்கு விரும்பத்தக்கதல்ல. ஆனால் ஹுஸைனுக்காக அழுவது விதி விலக்கானது. அதற்குக் கூலியுண்டு." (22)

"இமாம் ஹுஸைனின் கப்றை சியாரத் செய்யுமாறு எமது ஷீயாக்களைப் பணியுங்கள் ஹுஸைனின் இமாமத்தை ஏற்றோர் மீது அது கடமையாகிறது என இமாம் பாகிர் அலைஹிஸ் ஸலாம் முஹம்மதிப்னு முஸ்லிமைக் கோரினார். (23)

கர்பலாவைத் தரிசிப்பானது, உண்மையில் மனித இனத்துக்கு ஈமானினும் நற்காரியங்களினதும் பாடங்களைக் கற்றுத் தருகின்றது. இமாம் ஹுஸைனை சியாரத் செய்வது, அவரது துன்பங்களுக்காக நெஞ்சுருகிக் கண்ணீர் வடிப்பது,நினைவுகளை உயிர்ப்பிப்பது என்பன மிகச் சிறந்த காரியங்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவற்றோடு நின்றுவிடக் கூடாது. அவற்றுக்கு ஒரு நோக்கம் இருக்கிறது. இந்த வெளிப்பாடுகள் மூலம் மார்க்கத்தின் மீதான பற்று,தியாகம், இறைவழியைக் காப்பதற்காகப் போராடுவது பற்றிய உணர்வுகளால் நம் இதயங்கள் நிறைய வேண்டும் என்பதுவே இவ் இலட்சியம்.

ஹுஸைனியப் போராட்டத்தின் பாடங்களை மனித இனத்துக்குப் போதிக்கின்ற பணி நம் மீது உள்ளது. வெறுமனே சம்பிரதாயங்களோடு மட்டும் நின்றுவிடாது இப் பணி செவ்வனே நிறைவேற முயற்சி செய்தல் அவசியம். (24)

பண்புநெறிகள்

இமாம் ஹுஸைனின் 56 ஆண்டு கால வாழ்க்கை, இறைவனின் திருப்திக்காக மட்டுமே வாழ்ந்த, இஸ்லாத்தின் புனித செய்தியைப் பரபுவதற்கென வாழ்ந்த, தூய்மையான வாழ்வு என்பது புலனாகிறது. அந்த அற்புத வாழ்வின் சில அம்சங்ளை நோக்குவோம்.

வணக்கம்

தொழுகையில் அதிக இன்பம் கண்டார்கள். பிரார்த்தனையிலும் குர்ஆன் ஓதுவதிலும் பாவமன்னிப்புக் கோருவதிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார்கள். ஒரே நாளில் பல நூறு றக்அத்துகள் தொழுததும் உண்டு. (25)

அவரது வாழ்வின் இறுதி இரவு இரைஞ்சுவதும் பிரார்த்திப்பதுமாகக் கழிந்தது. இறுதி இரவை துஆவுக்கும் பிராத்தனைக்குமாகச் செலவிட வேண்டிய அவசியத்தை எதிரிகளிடமும் சொன்னார்கள். "நான் தொழுகையையும் குர்ஆன் ஓதுவதையும் அதிகமாக பாவமன்னிப்புத் தேடுவதையும் துவாக் கேட்பதையும் நேசித்தவன் என்பது என் இறைவனுக்குத் தெரியும். இவ் இரவைத் தொழுகையிலும் துவாவிலும் ஈடுபடுவதற்காக எமக்கு விட்டுத் தாருங்கள்" என செய்தி அனுப்பினார். (26)

அரபாவில்

கால் நடையாகவே சென்று பல முறை ஹஜ் செய்தார்கள். (27) காலிபின் புதல்வர்களான பிஷ்ரும் பஷீரும் அறிவிக்கிறார்கள்: அரபா இரவில் நாம் இமாம் ஹுஸைனுடன் இருந்தோம். இமாம் மிகப் பணிவுடன் வெளியே வந்தார். மெதுவாக நடந்து மலை அடிவாரத்தை அடைந்தார். அங்கு அவரோடு அவருடைய குடும்பத்தினரும் நண்பர்களும் பணியாளர்களும் கிப்லாவை நோக்கி நின்றிருந்தனர். பின்னர் தன் கைகளை முகத்துக்கு எதிராக ஏந்தி பிச்சை கேட்கின்ற தோரணையில் இரைஞ்சலானார்கள்:

"இறைவா! உனக்கே எல்லாப் புகழும் உரித்தானது. உன் விதியைத் தடுப்போர் யாருமிலர். உன் கொடையை யாரால் தடுக்க முடியும்? உன்னைப் போன்று காரியமாற்ற யாரால் முடியும். தாராளத் தன்மை கொண்டவன். அற்புதங் களைப் படைத்தவன். சிருஷ்டிகளைத் தன் அறிவு நுணுக்கத்தால் சிறப்பாக்கியவன்;. எதுவும் அவனுக்கு மறைந்தவையல்ல. நம்பிக்கைகள் அவனிடம் வீண் போவதில்லை. செயலகளுக்குக் கூலி கொடுப்பான். துன்பப் படுவோர்க்கு கருணை காட்டுவான். ஒளிமயமான இறைவேதத்தை இறக்கியவன். அழைப்பைச் செவிமடுப்பவன். கஷ்டங்களைக் களைபவன். அந்தஸ்துகளை உயர்த்துபவன். கொடுங்கோலரை அடக்குபவன். அவனன்றிக் கடவுளில்லை. அவனுக்கு ஒப்பார் யாருமில்லை. அவன் செவிமடுப்பவன். பார்ப்பவன். அறிவுள்ளவன். அன்புள்ளவன். (28) எல்வாற்றின் மீதும் மிகைத்தவன்.

அல்லாஹுவே! நாம் உன்னிடம் இரைஞ்சுகிறோம். உம் இறைமைக்குச் சாட்சி பகர்கிறோம். எனது இரட்சகனும் நீயே. இலட்சியமும் நீரே. அறியப்படாத நிலையில் இருந்த என்னை ஆரம்பித்தவன் நீதான். மண்ணிலிருந்து உருவாக்கினாய். பல காலம் வாழும் வகையில் உறுதியாக்கினீர். பின்பு பூமிக்கு என்னை நல்ல நிலையில் வெளியாக்கினீர். தொட்டிலில் என்னைத் தாங்கிக் காப்பாற்றினாய். பாலூட்டிப் பரிவு காட்டினாய். பராமரித்தோரிடம் என் மீது இரக்கத்தைப் பொழிய வைத்தாய். தாய்மாரிடம் எம்மீது பாசத்தைத் தூண்டி விட்டாய். குறைகளின்றிப் பாதுகாத்தாய்.

கருணைக் கடலான நீ கண்ணியமடைந்தவன். எனக்குப் பேசக் கற்றுத் தந்தாய். நாளும் பொழுதும் வளர வழி செய்தாய். என் இயல்பு முழுமை பெற்றது. என் உணர்வுகள் சமபலமாயின. உன் அத்தாட்சியை என் மீது ஏற்படுத்தினாய். உன் ஞானத்தை எனக்கு வெளிப்படுத்தினாய். உன் அறிவின் அற்புதத்தால் என்னை அதிசயத்தில் ஆழ்த்தினாய். பூமியிலும் வானத்திலும் நீ புரிந்த சிருஷ்டி அற்புதத்தைக் காணச் செய்தாய். உனக்கு நன்றி செய்து நினைவு கூரும் நற்பணியைப் புரிய வைத்தாய். உன்னைப் பணிந்து வழிப் படுவதை எனக்குக் கடமையாக்கினாய். உன் தூதர்கள் கொண்டு வந்த செய்தியை எனக்கு விளங்கச் செய்தாய். உன் திருப்தியை ஏற்பதை இலகுவாக்கினாய். எல்லா விடயத்திலும் உன் அன்பையும் உதவியையும் சொறிந்தாய்.

மிகச் சிறந்த மூலத்தினால் என்னைச் சிருஷ்டித்ததிலே இருந்து என் மீது நீ சொறிந்த அருளும் கருணையும் ஒன்றிரண்டல்ல. விதவிதமான வாழ்வின் இன்பங்களை எனக்கு அள்ளி அருளினாய். நீ என் மீது புரியாத அருள் எதுவுமே இல்லை இறைவா! எல்லாத் துன்பங்களையும் என்னிடமிருந்து தடுத்து விட்டாய். நான் உன்னையறியாது அசட்டுத் தனமாக நடந்து கொண்ட போதில் கூட நீ என்னைக் கைவிடாது உம்மை நெருங்கும் வழியை எனக்குக் காட்டினாய். அதில் எனக்கு வெற்றியும் தந்தாய்.

நீ எனக்கு அருளிய அருட்கொடைகளை நான் எப்படி எண்ணிக் கணக்கிடுவேன். எந்த உதவிக்காக நான் நன்றி சொல்வேன். அவை எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவை. எவராலும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது. எனக்கு மகிழ்ச்சியையும் சுகத்தையும் மட்டுமே தந்தாய். என்னை எத்தனை கோடி துன்ப துயரங்களில் இருந்து பாதுகாத்தாய்.

என் விசுவாசம் உன்மையானது இறைவா. நான் பல யுகங்கள் வாழ்ந்து உனது அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்த முயற்சித்தாலும் நீ என் மீது புரிந்த ஒரேயொரு அருளுக்காகவாவது நன்றி செலுத்த முடியாது போகும்.

இறைவா! நான் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் இருப்பது போன்ற அச்சத்தை எனக்கு அருள்வாயாக. உம் மீதான காதலால் என்னை மகிழ்விப்பாயாக. பாவங்களால் என்னைப் பாழாக விடாதே.

பரிபூரணமான மனத் திருப்தியை எனக்குத் தருவாயாக. உள்ளத்தின் உறுதியையும் செயலில் தூய்மையையும் கண்ணுக்கு ஒளியையும் மார்க்கத்தின் தெளிவையும் உடலில் ஆரோக்கியத்தையும் தந்து அருளுவாயாக.

என் மீது நீ சொறிந்த அனுக்கிரகங்களை நான் எண்ணி முடிப்பது எவ்வாறு? எனக்கு அருள் புரிந்தாய். அள்ளித் தந்தாய். நல்லதையே செய்தாய். அழகு படுத்தினாய். சிறப்பாக்கி வைத்தாய். பரிபூரணப் படுத்தினாய். உணவளித்தாய். வெற்றியளித்தாய். கொடையளித்தாய். நிரப்பமாக்கினாய். திருப்திப்படுத்தினாய். உறைவிடம் அளித்தாய். போது மாக்கினாய். வழிகாட்டினாய். குறைகளை மறைத்தாய். பாதுகாப்புத் தந்தாய். மன்னிப்பளித்தாய். சக்தியைத் தந்தாய். கண்ணியம் தந்தாய். உதவி செய்தாய். தோள்

கொடுத்தாய். உறுதிப் படுத்தினாய். ஒத்தாசை புரிந்தாய். சுகப் படுத்தினாய். சங்கைப் படுத்தினாய்.

என் இறைவனாகிய நீ கண்ணியம் மிக்கவன். புகழும் நன்றியும் உனக்கு மட்டுமே சொந்தமானது. என்னுடைய தவறுகளையும் பாவங்களையும் புரிந்து கொண்டு மன்னிப்புக் கோருகிறேன். அவற்றை மன்னித்து விடுவாயாக. (29)

இமாம் ஹுஸைனுடன் சேர்ந்து கூடியிருந்த மக்களும் இந்த துஆவை ஓதினர். இந்த துஆ எல்லோர் மனதையும் பிளிந்து எடுத்தது. உரக்கக் கத்தி அழுது மன்றாடினர்.

மக்களுடன்..

உஸுதுல் காபா| எனும் நூலில் இப்னுல் அதீர் இப்படி எழுதுகிறார்: “இமாம் ஹுஸைன் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அதிமாக தொழுகையிலும் நோன்பிலும் ஹஜ்ஜிலும் தருமங்கள் செய்வதிலும் மட்டுமன்றி ஏனைய எல்லா நற்காரியங்களிலும் அதிகளவு ஈடுபாடு கொண்டவராக இருந்தார். (30)

இமாம் ஹுஸைன் தனது சகோதரர் இமாம் ஹஸனுடன் சேர்ந்து கால்நடையாக ஹஜ்ஜுக்குச் செல்லும் போதெல்லாம் அக்காலப் பெரும் முக்கியஸ்தர்கள் எல்லோரும் இவர்களுக்கு கண்ணியமளிக்கும் விதத்தில் வாகனங்களை விட்டு இறங்கி இவர்களுடன் சேர்ந்து கால்நடையாகவே பயணித்தனர். இது அன்னாரின் மகிமைக்குச் சிறந்த சான்றாகும். (31)

இமாம் ஹுஸைன் மக்கள் மத்தியில் மேன்மையுடன் மதிக்கப் படுவதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. இமாம் எப்போதும் சாதாரண மக்களுடனே வாழ்ந்தார். அவர்களது உணர்வுகளுடன் ஒன்றிப் போயிருந்தார். சமுதாயத்தின் நாடித் துடிப்பை நன்கு அடையாளங் கண்டிருந்தார். அவரது மிக உறுதியான விசுவாசம் அவரை மக்களுடனும் அவர்களது சுகதுக்கங்களுடனும் மிக நெருக்கமாக வாழ வைத்தது.

பிரமாண்டமான அரண்மனையோ படைபட்டாளங்களோ பரிவாரங்களோ அவரிடம் இருந்ததில்லை. சாதாரணமான வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். ஒரு முறை பாதை ஓரத்தில் சில ஏழைகள் உணவருந்தத் தயாராகிக் கொண்டிருந்தனர். இமாம், அவர்களைக் கடந்து சென்ற போது தம்முடன் உணவருந்த வருமாறு அவரை அழைத்தனர். மிக்க மகிழ்ச்சியோடு உட்கார்ந்து அவர்களுடன் உணவருந்தினர். “பெருமை அடிப்பவர்களை அல்லாஹ் விரும்புவதில்லை” (32)என்ற குர்ஆன் வசனத்தை ஓதிய இமாம் அந்த எளியவர்களிடம், “நீங்கள் அழைத்தீர்கள். நான் ஏற்றுக் கொண்டு தங்களுடன் உணவருந்தினேன். இப்போது என்னுடன் வாருங்கள்” எனக் கூறி அவர்களை வீட்டுக்கு அழைத்துச் சென்று விருந்து படைத்து மகிழந்தார்கள். (33)

சுஐப் இப்னு அப்துல் றஹ்மான் குஸாயீ கூறுகிறார்: “கர்பலாவின் போது இமாம் ஹுஸைனின் முதுகில் அடையாளம் ஒன்று காணப்பட்டது. அது பற்றி ஹஸ்ரத் ஸெய்னுல் ஆபிதீனிடம் விசாரிக்கப்பட்டது. “ஏழைகள், விதவைகள்,அநாதைகள்

ஆகியோருக்காக இரவு நேரங்களில் உணவுப் பொருட்களைச் சுமந்து செல்வதால் ஏற்பட்ட வடு" என்றார் அவர். (34)

வறியோருக்கு உதவி செய்வதிலும் அவர்களைப் பாதுகாப்பதிலும் இமாம் கொண்டிருந்த கரிசனைக்குப் பின்வரும் சம்பவம் சிறந்த சான்றாகும்.

எல்லாவித செல்வங்களும் சொகுசுகளும் பதவி பரிவாரங்கள், பெண்கள் என யஸீதின் காலடியில் குவிந்து கிடந்தன. எனினும் ஏனையோரின் மானத்தை நசித்து குடும்பப் பெண்களைக் கூட அபகரிக்கும் படுபாதகத்தை விட்டுவிட வில்லை. அப்துல்லாஹ் இப்னு ஸலாம் என்பாரின் மனைவி உரைனப் இப்பாதகனின் கண்ணில் பட்ட அப்பாவி. தனது மகனின் கீழ்த்தரமான நடத்தைக்காக அவனைத் தண்டிக்க வேண்டிய முஆவியா, பொய்யாலும் வஞ்சகத்தாலும் அதிகார பலத்தாலும் அவளைக் கணவனிடமிருந்து பலாத்காரமாகப் பிறித்தெடுத்து தன் மகனின் கோரக் கரங்களில் ஒப்படைத்தார். இந்தக் கீழ்த்தரமான செயலால் இமாம் ஹுஸைன் கடும் சீற்றம் கொண்டார். முஆவியாவுடன் கடுமையாக வாதிட்டார். இஸ்லாமிய சட்ட விதிகளின் பிரகாரம் இச் செயல் பிழையானது என நிரூபித்து அவ் அபலையின் கண்ணியத்தையும் குடும்பத்தையும் காப்பாற்றினார். இவரது இப்புனித செயலானது நபியின் குடும்பத்தினர் இஸ்லாமிய சட்டங்கள் மீது கொண்டிருந்த பற்றையும் அப்பாவி மக்கள் மீது கொண்டிருந்த நேசத்தையும் உலகறியச் செய்தது. (35) உமையாக்களின் அடாவடித்தனத்தையும் அது அம்பலமாக்கியது.

கண்ணியம்

அலாயிலீ என்பவர் எழுதுகிறார்: "வீரத்தால் சிறப்புற்றவர்களையும் தியாகத்தால் மகிமை பெற்றவர்களையும் துறவால் உயர்ந்தவர்களையும் அறிவால் மேன்மையடைந்தோரையும் நாம் அறிந்திருந்தோம். இவ்வனைத்து பண்புகளையும் ஒன்றாய்க் கொண்ட சிறப்பை இமாம் ஹுஸைனிடம் கண்டோம். அவரது தந்தையும் அவரைப் போன்று விளங்கியவர்.|| (36)

எல்லாச் சிறப்புகளுக்கும் உச்சியில் நிற்கின்ற சிலர் உள்ளனர். நபித்துவத்தின் சிறப்பு நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வரை செல்கிறது. ஆண்மைக்கு அலீ, மேன்மைக்கு பாத்திமா... இத்தகையோரது நினைவு வெறும் ஒரு தனி மனிதனின் நினைவன்றி மனித இனத்தின் நினைவாகும். இமாம் ஹுஸைன்; ஒரு மனிதர் மட்டுமன்றி மனிதனாக இருப்பதற்கு அவர் ஓர் அத்தாட்சி. அவர் கண்ணியம் மிக்கவர். ஆனால் கண்ணியத்தின் உண்மை வடிவம் அவர். அவரது நினைவைக் கொண்டாடுவோம். அவரிடமிருந்து கற்போம். அவர் கூறிய நல் வாக்குகளை நாம் நோக்குவோம். மனித இனம் தன் அழுக்குகளில் இருந்து தூய்மை பெற அவை போதுமானவை.

பொன்மொழிகள் சில:

“மனிதர்கள் துன்யாவின் அடிமைகள். தீன் அவர்களது நாக்கு நுனியிலேயே இருக்கிறது. தமது வாழ்க்கை போகும் திசையை நோக்கி அதனை இழுத்துச்செல்கின்றனர். துன்பங்கள் வரும் போது மார்க்கப் பற்றுள்ளோர் குறைந்து விடுவார்கள்” (37)

தனது மகன் ஸெய்னுல் ஆபிதீனை விளித்துச் சொல்கிறார்;: “உதவிக்கு அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லாதவர்களிடம் அநியாயம் செய்யாதே.|| (38)

ஒரு மனிதர் இமாமிடம் இம்மைக்கு மறுமைக்கும் நன்மை பயக்கும் விஷயமொன்றை எழுதித் தருமாறு கேட்டார். இமாம் இப்படி எழுதிக் கொடுத்தார். “அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால். மக்கள் கோபப்பட்ட போதும் இறைதிருப்தியையே நாடியவருக்கு அவன் மக்களிடம் தேவையவற்றவனாக்குவான். அல்லாஹ் கோபப்படும் போதும் மனிதரின் திருப்தியை நாடுபவரை மனிதர்களிடமே ஒப்படைத்து விடுவான். வஸ்ஸலாம். (39)

இமாம் ஹுஸைனிடம் ஒருவர் வந்து, “நான் பாவம் செய்தவன். பாவத்திலிருந்து விலகப் பாடுபடுகிறேன். எனக்கு உபதேசம் செய்யுங்கள்” என்றார்.

பதிலாக இமாம் சொன்னார்: “ஐந்து விடயங்களைச் செய்து விட்டு, நினைத்தவாறு பாவம் செய். முதலாவது அல்லாஹ்வின் றிஸ்கை உண்ணாதே. பின்னர் பாவம் செய். இரண்டாவது. அல்லாஹ்வின் ஆட்சியில் இருந்து வெளியேறு. பின்னர் விரும்பியவாறு பாவம் செய். மூன்றாவது, உயிரை வாங்கும் மலக்கு வந்தால் உன் உயிரை எடுக்காமல் தடுத்து விடு. பின்னர் மனம் விரும்பியவாறு பாவம்செய். நான்காவது, அல்லாஹ்வின் பார்வை படாத இடம் ஒன்றைத் தேடிக்கொள். அங்கிருந்து நன்றாக பாவம்செய். ஐந்தாவது, உன்னை நரகத்தில் நுழைத்தால் அங்கு நுழையாதே. அது முடியுமென்றால் தாராளாமாகப் பாவம் செய். (40)

(1)இமாம் ஹுஸைன் பிறந்த நாள், மாதம், வருடம் பற்றிய வேறு கருத்துக்களும் உள்ளன. மேலே குறிப்பிடப்பட்டது ஷீயாக்கள் மத்தியில் பிரபல்யமானதாகும். பார்க்க: தப்ரீஸீ, அஃலாமுல் வறா, ப.213.

(2)இந்த அஸ்மா பெரும்பாலும் அஸ்மா பின்த் யஸீத் இப்னு ஸகன் அன்ஸாரீ ஆவார். பார்க்க: அஃயானுஷ் ஷீயா,ப.167.

(3)ஷெய்க் தூஸீ, ஆமாலீ, பா.1, ப.377.

(4)ஷபர், ஷுபைர், முஷ்பிர் என்பன நபி ஹாரூன் (அலை) அவர்களின் குழந்தைகளின் பெயர்கள். இதே வடிவிலும் அர்த்தத்திலும் ஹஸன், ஹுஸைன், முஹ்ஸின் என தம் குழந்தைகளுக்கு நபிகளார் பெயரிட்டார்கள். தாஜுல் உரூஸ்,பா.3, ப.389. லிஸானுல் அரப், பா.6, ப.60.

(5)மஆனீ அல் அக்பார், ப.57

(6)குழந்தைகளின் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் அக்கீக்கா கொடுப்பது விதந்துரைக்கப் பட்டுள்ளது. வஸாயிலுஷ் ஷீயா, பா.15, ப.143.

(7)உஸூலுல் காபீ, பா.6, ப.33

(8)மக்தலுல் க்வாரஸ்மீ, பா.1, ப.146, இமாம் ஸதூக், இக்மாலுத் தீன், ப.152.

(9)ஸுனன் திர்மிதீ, பா.5, ப.323

(10)தகாஇருல் உக்பா, ப.122

(11)அல் இஸாபா, பா.1, ப.330

(12)ஸுனன் திர்மிதீ, பா.5, ப.324

(13)அல் இஸாபா, பா.1, ப.333

(14)இப்னுல் ஜவ்ஸீ, தஸ்கிரத்துல் கவாஸ், ப.234, அல் இஸாபா, பா.1, ப.333, இந்த சம்பவம் நடந்த போது இமாமுக்கு வயது பத்து.

(15)ஷெய்கு முபீத், அல் இர்ஷாத், ப.173

(16)அல் கிஷ்ஷீ, றிஜால், ப.50, கஷ்புல் ஹும்மா, பா.2, ப.206.

(17)மக்தலுல் கவாரஸ்மீ, பா.1, ப.184, அல. லுஹூப், ப.24.

(18)துல்ஹஜ் எட்டாம் நாள் ஹாஜிகள் மினா செல்வது முஸ்தஹப்பு. அக்காலத்தில் முஸ்லிம்கள் இம்முஸ்தஹப்பை நிறைவேற்றி வந்தனர். இப்போது நேரடியாக அரபாவுக்குச் செல்வதும் உண்டு.

(19)காமிலுஸ் ஸியாராத், ப.68, முஸீரல் அஹ்ஸான், ப.9.

(20)அல் லுஹூப், ப.61

(21)காமிலுஸ் ஸியாராத், ப.1050

(22)மே.கு., ப.100

(23)மே.கு. ப.121

(24)மே.கு. ப.147

(25)அல் அக்துல் பரீத், பா.3, ப.143.

(26)ஷெய்க் முபீத், இர்ஷாத், ப.214.

(27)இப்னு ஷஹ்ர் ஆஷூப், அல் மனாகிப், பா.3, ப.224, உஸுதுல் காபா, பா.2, ப.20

(28)இங்கு அரபியில் ஷலதீப| என்ற சொல் வருகிறது. இதற்கு ஷெய்க் ஸதூக் விளக்கம் எழுதியுள்hர். 1.இறைவன் திட்டமிடலிலும் செயல்களிலும் கருணையுள்ளவன் மற்றும் மென்ரமயானவற்றின் கர்த்தா என்பதாலும் இப்பெயர் வந்தது. 2.அடியார்கள் மீது கருணை கொண்டவன். அவர்கள் மீது அருள் புரிபவன். (ஷெய்க் ஸதூக், அத் தவ்ஹீத், ப.217)

(29) இந்த துஅவை பலர் ரிவாயத் செய்துள்ளனர். பார்க்க: ஸெய்யித் இப்னு தாவூஸ், அல் இக்பால், ப.339-350, அல் கப்அமீ, அல் பலதுல் அமீன், ப.251-258, அல்லாமா மஜ்லிஸீ, பிஹார், பா.98, ப.213, கும்மீ, மபாத்திஹுல் ஜினான், மற்றும் பல.

(30)உஸுதுல் காபா, பா.2, ப.20

(31)திக்ரா அல் ஹுஸைன், பா.1, ப.253.

(32)ஸூரா அந் நஹ்ல்: 22

(33)பிஹாருல் அன்வார், பா.44, ப.189.

(34)அல் மனாகிப், பா.2, ப.222.

(35)பார்க்க: அல் இமாமா வ அஸ் ஸியாஸா, பா.1, ப.253.

(36)ஸுலுவ்வுல் ம.னா, ப.90

(37)துஹ்புல் உகூல், ப.250

(38)மே.கு. ப.251.

(39)பிஹாருல் அன்வார், பா.78, ப.126.

(40)மே.கு.